[2010 ஏப்ரல் 28

114—

ஆரம்ப சுகாதார நிலையம்

***47326—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கூட்டப்புளி, பெருமணல், இடிந்தகரை, கூத்தன்குழி, உவரி மற்றும் கூட்டப்பனை ஆகிய மீனவக் கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானவையாக உள்ளதால், இவ்வூராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ராதாபுரம் வட்டம், கூட்டப்புளி, பெருமணல், இடிந்தகரை, கூத்தன்குழி, உவரி, கூட்டப்பனை ஆகிய மீனவக் கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.*

திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில், கடற்கரைக் கிராமங்கள் ராதாபுரம் தாலுகாவில், ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் மட்டும்தான் உள்ளது. குறிப்பாக, கூட்டப்புளி, பெருமணல், பஞ்சல், இடிந்தகரை, தோமையார்புரம், கூத்தன்குழி, உவரி, கூட்டப்பனை, கூடுதாழை, மிக்கேல் நகர், ஜார்ஜ் நகர் உட்பட 11-க்கு மேற்பட்ட கிராமங்களில் மீனவ மக்கள் மிக அதிகமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். சுமார் 75,000 மக்கட்தொகை கொண்ட அந்த மீனவ மக்களுக்கு, மிகப் பெரிய கிராமமான உவரி, கூத்தன்குழி, இடிந்தகரை போன்ற ஊர்களிலாவது முதல்கட்டமாக நம்முடைய மாண்புமிகு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய நல்லாட்சியில் சுகாதாரத் துறை அமைச்சராக, சிறப்பாகச் செயல்பட்டு வருகின்ற நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு ஓர்*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 28]

ஆரம்ப சுகாதார மையத்தை அமைத்துத் தருவார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, கடந்த ஆண்டு வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்தில், துலுக்கர்பட்டியிலும், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில், நவலடியிலும், புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன. எனினும், புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்களைத் துவக்க வேண்டுமெனில், மைய அரசின் இலக்கின்படி 30,000 மக்கட்தொகை இருக்க வேண்டும். 8 கிலோ மீட்டர் தொலைவிற்குள் ஆரம்ப சுகாதார நிலையமோ அல்லது அரசு மருத்துவமனைகளோ இருத்தல் கூடாது. வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வடக்கன்குளம், பணகுடி, சங்கனாபுரம், துலுக்கர்பட்டி, ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள திசையன்விளை, தெ.கள்ளிக்குளம், கூடங்குளம், நவலடி ஆகிய 8 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானவை என்பதால், சட்டமன்ற உறுப்பினர் கோரும் இடங்களில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வாய்ப்புகள் இல்லை. கூட்டப்புளியினுடைய மக்கட்தொகை 6,522; பெருமணல் மக்கட்தொகை 1,391; இடிந்தகரை - 5,748; கூத்தன்குழி - 2,427; உவரி - 9,448; கூட்டப்பனை -1,098. இதுதான் இந்தக் கிராமங்களின் மக்கட்தொகை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

முற்பகல் 9-50

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடற்கரைக் கிராமங்களில் மிக அதிகமான மக்கட்தொகை உள்ள கிராமம் உவரி கிராமம் ஆகும். உவரியில் வாழ்கின்ற மீனவ மக்கள் அங்கிருந்து அரசு ஆரம்ப சுகாதார மையம் செல்ல வேண்டுமென்றால், 8 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள திசையன்விளைக்குத்தான் செல்ல வேண்டும். ஆகவே, உவரி, அதைத் தொட்டு இருக்கின்ற 2 கி.மீ. தூரத்தில் இருக்கின்ற கூட்டப்பனை, அதேபோன்று அருகில் இருக்கின்ற கூத்தன்குழி ஆகிய 3 ஊர்களையும் இணைத்து உவரியில் மட்டும் ஒரு புதிய ஆரம்ப சுகாதார மையம் இந்த ஆண்டு திறக்கப்படுமா என்று தங்கள்மூலம்

அறிய விரும்புகிறேன். கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னால் அந்தப் பகுதியில் மிகப் பெரிய அளவில் காலரா வந்தபோது நம்முடைய மாவட்டத்தினுடைய அனைத்து சுகாதாரத் துறை அதிகாரிகளுமே அங்கே முகாமிட்டு மிகச் சிறப்பாகக் கவனித்து, மக்களுக்குப், பாதிப்பு இல்லாமல் செய்தார்கள். கடற்கரையைத் தொட்டு இருக்கின்ற கிராமங்களாக இருப்பதால், அடிக்கடி அவர்களுக்கு மிகப் பெரிய நோய்கள் வர வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, மறுபரிசீலனை செய்து உவரியில் ஒரு ஆரம்ப சுகாதார மையமும், இந்த ஆண்டு 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக ஆரம்ப சுகாதார மையத்தைத் தரம் உயர்த்தும்போது, கூடங்குளம், வடக்கன்குளம் ஆகிய இரண்டு ஆரம்ப சுகாதார மையங்களையும் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாக அமைச்சர் அவர்கள் தரம் உயர்த்தித் தருவார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உவரி கிராமத்தில் மக்கள் தொகை 9,448. டி. உவரி, மற்றும் கே. உவரி ஆகியவை துணை சுகாதார நிலையத்திற்கு உட்பட்ட கிராமங்கள் ஆகும். நவரடி ஆரம்ப சுகாதார நிலையம், அருகில் துவக்கப்பட்டுள்ளது. 8 கி.மீ. தொலைவில் திசையன்விளை ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. 32 கி.மீ. தொலைவில் இராதாபுரம் அரசு மருத்துவமனை உள்ளது. இதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கமலக்கண்ணன்.

திரு. ஜெ. கமலக்கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி தொகுதிக்கு உட்பட்ட கீழ்க்கொடுங்காலூர் கிராமத்தில் சுமார் 5,000 பேர் உள்ளார்கள். இந்தப் பகுதிக்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, விதிகளின்படி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு.

திரு. த. தியோடர் ரெஜினால்டு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதியில் குமாரபுரம் பேரூராட்சியில் பெருஞ்சிறம்பு என்னும் மலைக் கிராமத்தில் மிகவும் ஏழ்மையான மக்கள் வசிக்கிறார்கள். தோட்டத் தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. இரப்பர் தோட்டங்கள் நிறைந்த மலைப் பகுதி. அங்கிருந்து மருத்துவச் சிகிச்சைக்கு 22 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தக்கலை மாவட்ட அரசு மருத்துவமனைக்குத்தான் வர வேண்டும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயைகூர்ந்து இதை நினைவில்கொண்டு, ஏழை மலைவாழ் மக்களுடைய மருத்துவச் சிகிச்சைக்காக அந்தப் பகுதியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைக் கிராமமாக இருந்தால் அவற்றிற்கு—Mobile Unit—நடமாடும் மருத்துவக் குழுக்கள் சென்று கொண்டிருக்கின்றன. தேவையெனில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. தண்டபாணி.

திரு. மா. தண்டபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேடசந்தூர் தொகுதியில் காசிபாளையம் என்பது, வேடசந்தூரிலிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. ஆகவே, அங்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அவசியம் வேண்டும். அது N.H.-இனுடைய போக்குவரத்துப் பகுதியில் இருக்கிறது. வேடசந்தூரிலிருந்து 15 கிலோ மீட்டரிலும் அரவக்குறிச்சியிலிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்திலும் உள்ளது. ஆகவே, தூரம் மற்றும் ஜனத்தொகை பொருத்தமாக இருக்கிற காரணத்தால், மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 50 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் துவக்கப்படுவதாக அறிவித்ததனுடைய பலனாக, எல்லோரும் கேள்வி கேட்கிறார்கள். கிட்டத்தட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்காகத்தான் அவை துவக்கப்படுகின்றன. ஆனால், 50-க்குத்தான் அனுமதி தரப்பட்டிருக்கிறது. மேலும், கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் வேண்டுமென்று மத்திய அரசிடமிருந்து அனுமதி கேட்டிருக்கிறோம். அவர்களிடமிருந்து அனுமதி வரப் பெற்றால், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பரஞ்ஜோதி.

திரு. மு. பரஞ்ஜோதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் தொகுதியில் அந்தநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையம், அங்கே இருக்கக்கூடிய ஒன்றிய அலுவலகக் கட்டடத்தின் ஒரு பகுதியில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கே சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு உரிய நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பாரா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 1,539 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. அவற்றில் தனியார் கட்டடங்களில் உள்ளவற்றிற்குக் கட்டடங்கள் கட்டுவதற்கு இப்போது நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை அந்த அடிப்படையிலே கண்டிப்பாக நிறைவேற்றப்படும்.

TRUTH ALONE TRIUMPHS